"தொல்காப்பிய அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாடும் ஐங்குறுநூறும்"
"Tolkāppiyam's Theory of Sandhi for 'A'-Ending Words and Ainkuṟunūṟu"

GODWIN SUDHARSAN A[1], (காட்வின் சுதர்சன் அ), Prof.S.RAVI, (பேரா.ச.இரவி)[2]

1. Research Scholar, Central University of Tamil Nadu,
Neelakudi, Thiruvarur – 610 005, Tamil Nadu, India.
Ph.No.: 9655468123, 8825989701. Email ID: virugodwin3@gmail.com ORCID: 0009-0005-0667-0851

2. Research Supervisor, DEAN, School Of Social Science & Humanities, Professor, Dept. Of Tamil, Central University of Tamil Nadu, Neelakudi, Thiruvarur – 610 005, Tamil Nadu, India. Ph.No.: 9940919624, 9865777065.Email ID: sravi@cutn.ac.in

Abstract:

Although Tolkappiyam is primarily a grammatical text focused on Tamil prosody, it also explains the origin of letters, how they form words, and how words combine to form phrases. It introduces the concept of punarcci (phonological combination), detailing how a final word (nirutta col) connects with a following word (kurittu varu kilavi), based on the word endings.Tolkappiyam classifies word endings into vowels (uyir), consonants (mey), and kutriyalukaram. Among these, the vowel 'a' (akara uyir) plays a significant role in forming akara veetrup punarcci, where it blends with the next word—a process called uyir mayangial. This grammatical pattern is a key focus of the text.

Early Tamil literary works, especially Pazhanthamizh literature, show connections with Tolkappiyam. Among them, Ainkurunuru, a classical agam collection, holds importance. This study compares the punarcci patterns found in Tolkappiyam with those in Ainkurunuru, particularly in the marutham thinai songs. The goal is to identify literary and grammatical parallels, and establish a chronological correlation between the two works. The alignment of Tolkappiyam's akara veetrup punarcci with that of Ainkurunuru supports the theory of shared linguistic tradition and time period.

Keywords: Tolkāppiyam, Aiṅkuṟunūṟu, Agaraveeru, Puṇarcci.

முன்னுரை

தொல்காப்பியம் செய்யுளியலை நோக்கிய இலக்கணமாக இருப்பினும் இதில் தமிழ்மொழியில் உள்ள எழுத்துகளின் பிறப்பு தொடங்கி அது சொல்லாவதற்கும் தொடராவதற்குமான இலக்கணமும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் சொற்கள் இணைந்து தொடராவதற்குரிய புணர்ச்சியினை நிறுத்த சொல், குறித்துவரு கிளவி என்பதாகக் கட்டமைத்து விளக்கியுள்ளது,தொல்காப்பியம். இப்புணர்ச்சியானது நிறுத்த சொல்லின் ஈறுகளை மையமிட்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் இந்த ஈறுகளை உயிர், மெய், குற்றியலுகரம் என்பதாகப் பிரித்து விளக்கியுள்ளது. இவற்றுள் அகர உயிரானது நிறுத்த சொல்லின் ஈறாக அமைந்து குறித்துவரு கிளவியுடன் இணைவது உயிர் மயங்கியலில் விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

இத்தொல்காப்பியக் காலத்திற்கு முன்னும் பின்னும் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் பாட்டும் தொகையும் என வரையறை செய்யப்படும் பழந்தமிழ் இலக்கியங்கள் தொல்காப்பியக் காலத்தோடு ஓரளவு ஒத்த நிலையில் அமைகின்றன. அவற்றுள் முன்பழந்தமிழ் இலக்கியம் என்பதாய் வரையறை செய்யப்படும் ஐங்குறுநூறு அக நூல்களில் முதன் முதலில் தொகுக்கப்பட்ட சிறப்பு உடையது.

இந்நிலையில் தொல்காப்பியத்தால் உயிர் மயங்கியலில் கட்டமைக்கப்பட்டுள்ள அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாட்டினை முன்பழந்தமிழ் இலக்கியமான ஐங்குறுநூற்று அகரவீற்று நிறுத்த சொற்களின் புணர்முறைமையுடன் பொருத்தி இலக்கிய இலக்கணங்களுக்கு இடையேயான பொருத்தப்பாட்டினை அடையாளங்காட்டி அதன் அடிப்படையில் தொல்காப்பியத்திற்கும் ஐங்குறுநூற்றிற்கும் இடையேயான கால ஒத்திசைவினை வெளிக்காட்டுவது இவ்வாய்வின் நோக்கமாகும். தொல்காப்பிய அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாடு ஐங்குறுநூற்று அகரவீற்று நிறுத்த சொற்களின் புணர்முறைமையுடன் பொருந்தியமையும் என்பது இந்த கட்டுரைக்கான கருதுகோளாகக் கொள்ளப்பட்டு தொல்காப்பியமும் ஐங்குறுநூறும் ஒப்பிட்டு ஆராயப்படவுள்ளது. மேலும், ஆய்வின் விரிவு கருதி ஐங்குறுநூற்று மருதத்திணைப் பாடல்கள் மட்டும் ஆய்வு எல்லையாகக் கொள்ளப் பெறுகின்றன.

தொல்காப்பிய அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாடும் ஐங்குறுநூறும்

அங்காந்து இயலும் அகரமானது “உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும்”(தொல்.69) என்பதின்வழி நிறுத்தசொல்லின் ஈறாக அமையும் என்பது பெறப்படுகிறது. ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் அகரவீற்றினைக் கொண்ட இருநூற்று நாற்பத்தைந்து சொற்கள் இடம் பெற்றுள்ளன.

தொல்காப்பியம் அகரவீற்றினை அல்வழி, வேற்றுமை ஆகிய இரு புணர்நிலைகளிலும் விளக்கியுள்ளது. நிறுத்தசொல்லின் ஈறாக அகரம் அமைந்திருக்கையில் குறித்துவரு கிளவியின் முதலில் உயிர் அல்லது மெய் என்ற இரு புணர்எழுத்துகளும் இடம்பெறுவதனைத் தொல்காப்பியத்தின் மூலம் அறிய முடிகிறது. இதன் அடிப்படையில் தொல்காப்பிய அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாட்டினை அகரவீற்றுயிர் + உயிர்/மெய் என்பதாகக் கட்டமைக்கலாம்.

இவ்வாறாக அல்வழியிலும், வேற்றுமையிலும் நிகழும் அகரவீற்றுயிர் + உயிர்/மெய் என்ற புணர்ச்சியினை மொழிபுணர் இயல்புகளான மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல், இயல்பு என்ற அடிப்படையில் வகைப்படுத்தி அதனை ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றுத் தரவுடன் பொருத்தி நோக்கப்பட்டுள்ளது.

அகரவீற்றில் மெய்பிறிதாதலும் ஐங்குறுநூறும்

அகரவீற்றில் மெய்பிறிதாதலானது “தொடரல் இறுதி தம்முன் தாம்வரின் / லகரம் றகரவொற் றாதலு முரித்தே”(தொல்.215) என்பதாக ஒர் இடத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளமையை தொல்காப்பியம் சுட்டியுள்ளது. அகரவீற்று ஈரெழுத்தொரு மொழிகளான பல, சில என்னும் சொற்கள் இயல்பாகப் புணரும் என்று விளக்கப்பட்டபின் அதற்கு சிறப்பு விதியாக இது அமைந்துள்ளது. இதில் பல, சில என்பன தம்முன் தாம்வரின் ஈற்று அகரம் கெட்டு லகர ஒற்று(ல்) றகர ஒற்றாகத்(ற்) திரிந்து புணரும் என்பது விளக்கப்பட்டுள்ளது. மேலும், “ 'தன்முன் தான்' என ஒருமையாற் கூறாது 'தன்முன் தாம் வரின்' என்ற பன்மையான், மேல் பல சில என நின்ற இரண்டும் தழுவப்பட்டன. 'தொடரலிறுதி தம்முன்வரின்' என்னாது 'தாம்" என்றதனான், இம்முடிபின்கண் பலவென்ப தன்முன் பல வருக. சிலவென்பதன்முன் சில

வருக என்பது கொள்ளப்பட்டது”(ப.249,1979) என்ற இளம்பூரணரின் கருத்து இதனை தெளிவு படுத்துகிறது. இதனை· பல + பல = (பல்+அ+பல)· பல்+பல(ல்· ற்)= பற்பல / சில+சில = (சில்+அ+சில)· சில்+சில(ல்· ற்)= சிற்சில என்பதாய் முறைப்படுத்த முடிகிறது.

மேலும், இந்நூற்பாவில் லகர ஒற்று றகர ஒற்றாகும் என்று கூறாததற்கும், அகரக்கேடு குறித்து விளக்கம் ஏதும் இல்லாததற்கும் உரையாசிரியர்களிடத்து முரண்பட்ட கருத்துகள் உள்ளன. “லகரம் றகரமாம் என்னாது லகரம் றகரவொற்றாம் என்ற ஞாபகத்தான், அகரம் கெடுமென்றானாகக் கொள்க, அருத்தாபத்தி முகத்தால், தம்முன் தாம்வரின் லகரம் றகரவொற்றாமெனவே, தம்முன் பிற வந்தவிடத்து லகரம் றகரவொற்றாகாது அகரம் கெடுமென்பது கொள்ளப்படும்”(ப.249,1979) என்று இளம்பூரணரும், “லகரம் றகர வொற்றாம் என ஒற்றிற்குத் திரிபு கூறி அகரம் கெடுதல் கூறிற்றிலர் எனின், வாராததனால் வந்தது முடித்தல் என்னும் உத்திபெற வைத்தது என்றுணர்க”(ப.153,2019) என்று நச்சினார்க்கினியரும், “அகரத்திற்குக் கேடு வாராத சூத்திரத்தானே லகரம் றகர ஒற்றாய் வரும் எனப் பிரித்துத் திரிபு கூறியதே பற்றாக அகரம் ஆண்டு நில்லாது கெடும் என்று கொள்ளவைத்ததனானே, ‘சிற்சில வித்திப் பற்பல கொண்டார்’” (மரபியல்110) என்று பேராசிரியரும் அகரம் கெட்டு லகர ஒற்று(ல்) றகர ஒற்றாகத் திரிந்துள்ளது என்ற கருத்துடையவர்களாக உள்ளனர். ஆனால், “வகரம் (எழு.210) யகரம் (எழு.. 212) என்ற சொற்கள் வகரவொற்று யகரவொற்று எனப் பொருள் படாது வ, ய எனப் பொருள்படுகின்றமையான் ஈண்டும் ஆசிரியர் லகரம் என்றதனால் லகரவொற்றைக் குறிக்காது ல என்றதையே குறிற்தனர் எனக் கொள்ளின் சாலும். ஆகலின் 'றகரவொற்று' என்ற விடத்து 'ஒற்று' என்றது மிகையென்றும், அது அகரம் கெடும் என்றதை ஞாபிக்கின்றது என்றும் உரைகாரர்கள் கூறுவது பொருந்தாக் கூற்றாகும்”(ப.207,1937) என்ற சுப்பிரமணிய சாஸ்திரியாரின் கருத்தும், “ஆசிரியர் லகரமெய் றகர மெய்யாகத்திரியும் என்றே விதிகூறினார் என்பதும், லகரத்தின் மேல் நின்ற அகரம் வாராததனான் வந்தது முடித்தல் என்னும் உத்தியான் கெடுக்கப்படும் என்பதும் அவ்விருவர் கருத்துமாதல் அறியப்படும். ஆயின் ஆசிரியர் லகரம் என்றது லகரவுயிர்மெய்யையே குறிக்கும். லகரம் என்பது லகரமெய்யையே யன்றி உயிர்மெய்யை யுணர்த்துமோ எனின் உணர்த்தும். முன்னர்,"பொன்னென் கிளவி யீறுகெட முறையின் / முன்னர்த் தோன்றும் லகார மகாரம்" (புள்ளி. 61 என்னுமிடத்து, லகரம் என்றது உயிர்மெய்யினையே யுணர்த்துதல் காண்க. இதனால் லகரம்(ல) றகரமெய்யாகத் திரியும் என்பது சூத்திரத்தாற் போதருவதாகும். ஆகலின் உத்தியால் அகரம் கெடுதல் வேண்டா”(ப.51,2015-16) என்ற வேங்கடராசலு ரெட்டியாரின் கருத்தும், “மூன்றெழுத்து முதலாகத் தொடரும் தொடர் மொழியல்லாத ஈரெழுத்தொருமொழிகளாகிய லகர ஈற்றுச் சொற்கள் தம்மொடு தாம் வந்து புணருங்கால் லகர உயிர்மெய் றகரப் புள்ளியாதலும் உரித்தாம். றகர ஒற்றாதல் என்றதனான் லகரம் உயிர்மெய் என்பது பெறப்படும். இதனானும் உயிர்மெய்யை ஆசிரியர் ஓரெழுத்தாக வைத்துக்கூறும் முறைமை புலப்படும்”(ப.202,2012) என்ற பாலசுந்தரனாரின் கருத்தும் லகரம் என்பது உயிர்மெய்யே. அந்த உயிர்மெய்யின் அகர உயிர் கெடுக்கப்படாமல் நேரடியாக றகர ஒற்றாக(ற்) மாற்றம் அடைந்துள்ளது என்று கொள்ள வழிசெய்கிறது. “‘பொன்னென்கிளவி' (357) என்னும் நூற்பாவில் 'லகாரம் மகாரம்' என்புழி அவ்வவ் வுயிர்மெய்

எழுத்துக்களையே குறித்தல் போல ஈண்டும் 'லகாரம்' என்பதற்கு லகர உயிர்மெய்யையே குறிக்கும் எனக்கொள்ளின், உரையாசிரியர்கள் கூறும் இவ்வுத்திகள் வேண்டற்பாலன வல்லவாம்"(ப.250,1979) என்ற சுந்தரமூர்த்தியின் கருத்து இதனையும் ஏற்றுக்கொள்ளலாம் என்ற இடத்திற்கு இட்டுச் செல்கிறது. லகாரம் என்பது தொல்காப்பியத்திலேயே உயிர்மெய்யாகக் குறிக்கப்பட்டிருப்பது இதற்கு வலுசேர்க்கிறது.

ஆனால் 'பொன்னென்' சூத்திரத்தில் வரும் லகாரம் உயிர்மெய்யாக அமைந்திருப்பதனைச் சுட்டும் இம்முறைமையானது சரியானது என்று தோன்றினாலும் அதே சூத்திரத்தில் உள்ள மகாரம் மெய்யாகச் சுட்டப்பட்டிருப்பது முதல் மூவரின் கருத்தும் சரியானது என்ற இடத்திற்கு இட்டுச் செல்கிறது. "லகார மகாரம் (புள்ளி 61) என ஆசிரியர் ஆட்சியில் லகாரம் உயிர் மெய்யாகவும் மகாரம் மெய்யாகவும் வந்தனவாதலின் இச்சூத்திரத்தில் லகரம் என்பதை உரையாளர்கள் மெய்யாகக் கொண்டதும் தவறில்லை; அதனால் அவர்கள் எழுதிய சிறப்புரைகளும் பொருந்துவனவே"(ப.52,2015-16) என்ற கருத்து இதனை உறுதிப்படுத்துகிறது.

இந்நிலையில் ல் + அ ˙ ற், ல ˙ ற் என்ற இவ்விரு முறைமையும் சரியானதா? என்ற ஐயம் தோன்றுகிறது. அதற்கும் தொல்காப்பியத்திலேயே விடை உள்ளது. மொழிபுணர் இயல்புகளாகத் தொல்காப்பியம் சுட்டும் திரிபு புணர்ச்சியில் மெய்பிறிதாதல் என்பதே உள்ளது. மாறாக உயிர்மெய்பிறிதாதல் என்ற முறைமை இல்லை. இதனாலே பல புணர்ச்சிகளில் மெய்யின் பற்றுக்கோடாக நிற்கும் உயிர் கெடுக்கப்பட்டு பின்னர் மெய் வேறொன்றாகத் திரிக்கப்பட்டுள்ளது. மேலும், "பல் என்று மெய்யீறாயிருக்கும் சொல்லே, பன்மையைக் குறிக்கும் அகரவுயிரோடு கூடிப் பல என்று நின்றதெனவும், புணர்ச்சிக்கண் பிறசொல்லோடு கூடி வரும்வழி அகரவிகுதியோடு நிற்றல் வேண்டாமையின், இயல்பாய மெய்யீறாய் நின்று புணர்ந்தது எனவும் அறிதல் கூடும்"(ப.51,2015-16) என்ற வேங்கடராசலு ரெட்டியாரின் கருத்து 'ல்' என்பதே ஈறாக அமைதல் கூடும் என்று கொள்ள வழிசெய்கிறது. எனினும் 'ல்' என்பதை ஈறாகக் கொண்டு அதனை உயிர்மயங்கியலில் விளக்க வாய்ப்பில்லை. இதன் அடிப்படையில் உயிர்மெய்யினை(ல) நேரடியாகத் திரிப்பதைக் காட்டிலும், அகரத்தினைக் கெடுத்து பின்னர் லகர ஒற்றினை(ல்) றகர ஒற்றாக(ற்) மாற்றும் முறைமையே(ல் + அ ˙ ற்) தொல்காப்பியப் புணர்ச்சிக் கோட்பாட்டிற்கு உகந்ததாக அமைந்துள்ளது.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறும் அகரவீற்று நிறுத்தசொற்களில் மெய்பிறிதாதல் நிகழவில்லை. அகரவீற்றில் மெய்பிறிதாதல் நிகழும் நிறுத்தசொல்லாகத் தொல்காப்பியம் சுட்டியிருக்கும் 'பல' என்பது பல பொலிக(ஐங்.1:2), பல வூறுக(ஐங்.3:2), பல சிறக்க(ஐங்.3:2), பல நந்துக(ஐங்.6:2), பல துஞ்சும்(ஐங்.43:2), பல சூள்(ஐங்.43:4), பலபொய்(ஐங்.47:5) என்பதாய் ஏழு இடங்களில் இடம்பெற்றிருப்பினும் அதன் குறித்துவரு கிளவியானது தம்முன் தாம்(பல) அற்றவையாக இருப்பதால் அங்கு மெய்பிறிதாதல் நிகழவில்லை. தம்முன் தாம் வந்து தொல்காப்பியத்தின் புணர்ச்சிக் கோட்பாட்டிற்கு மாறுபட்ட முடிவுகள் ஆய்வுப்பகுதியில் இடம்பெறவில்லை.

அகரவீற்றில் மிகுதலும் ஐங்குறுநூறும்

அகரவீற்றில் மிகுதல் புணர்ச்சியானது அதிக அளவில் இடம்பெற்றுள்ளது. எனவே அவற்றை மிகுதல் புணர்ச்சிக்குரிய வகைகளான எழுத்து மிகல், சாரியை மிகல் என்பதாய் வகைப்படுத்தி, ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றுத் தரவுகளுடன் பொருத்தி நோக்குவது தெளிவான புரிதலுக்கு வழிவகுக்கிறது.

அகரவீற்றில் எழுத்து மிகல்

அகரவீற்றில் எழுத்து மிகல் என்பது அகரம் நிறுத்த சொல்லீறாக அமைந்து குறித்துவரு கிளவியுடன் இணையுகையில் அங்கு எழுத்துகள் தோன்றிப் புணர்வதைக் குறிக்கிறது. இவ்வாறு தோற்றம் பெறும் எழுத்துகளின் அடிப்படையில் இதனை வகைப்படுத்தலாம். அந்நிலையில் அகரவீற்று நிறுத்த சொற்கள் குறித்துவரு கிளவியுடன் இணையுகையில் வலிமிகலும், மெலிமிகலும், இடைமிகலும் நடைபெறுவதாகத் தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு அகரவீற்றில் எழுத்து மிகல் கோட்பாட்டினை வரையறுக்க முடிகிறது.

அகரவீற்றில் வலிமிகலும் ஐங்குறுநூறும்

அல்வழி, வேற்றுமை ஆகிய இரு புணர்நிலைகளிலும் அகரவீற்றினை நிறுத்தசொல்லீறாகக் கொண்ட அஃறிணைப் பெயருடன் வல்லெழுத்தை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவிகள் இணையுகையில் அவற்றுக்கு உரிய தத்தம் ஒற்று மிகும் என்பது தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளது. “அகர இறுதிப் பெயர்நிலை முன்னர் / வேற்றுமை யல்வழி கசதபத் தோன்றின் / தம்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே”(தொல்.204) என்ற நூற்பாவின்வழி அல்வழியில் வலிமிகுவது பெறப்படுகிறது. மேலும், “வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே”(தொல்.217) என்பதின்வழி வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழியினைப் போலவே வலிமிகுந்து புணர வேண்டும் என்பது பெறப்படுகிறது.

சான்று)

இதனை˙ அகரவீற்று நிறுத்தசொல்(அஃறிணைப் பெயர்)+(க்)+க்/ (ச்)+ச்/ (த்)+த்/ (ப்)+ப் என்பதாய் பொதுமைப்படுத்த முடிகிறது.

பெயர்ச்சொற்கள் மட்டுமின்றி அகரவீற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும் வலிமிகுந்து புணர்வது “வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும் / எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும் / ஆங்க என்னும் உரையசைக் கிளவியும் / ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே”(தொல்.205) என்பதின்வழி விளக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அகரவீற்று வினையெச்சச் சொல்லும், உவமச் சொல்லும், ‘என’ என்ற எச்சச் சொல்லும், சுட்டாகிய அகரவீறும், ‘ஆங்க’ என்னும் உரையசைக் கிளவியும் நிறுத்த சொல்லாக அமையுகையில் அங்கு வலிமிகுவதை அறிய முடிகிறது. இவற்றில் அகரவீற்று வினையெச்சச் சொல் தவிர்த்த மற்றவை இடைச்சொல் என்பது சுட்டத்தக்கது.

சான்று)

இவற்றை· அகரவீற்று வினையெச்சச் சொல்/ அகரவீற்று உவமச் சொல்/ ‘என’ என்ற எச்சச்சொல்/ சுட்டாகிய அகரவீறு/ அகரவீற்று உரையசைக்கிளவி + (க்)+க்/ (ச்)+ச்/ (த்)+த்/ (ப்)+ப் என்பதாய் முறைப்படுத்த முடிகிறது.

இறுதியாக பல,சில என்னும் அகரவீற்றுச் சொற்கள் தம்முன் தாம்வரும் இடங்களில் லகர ஒற்று றகரமாகத் திரிந்து புணராமல் வலிமிகுந்து புணரும் சில இடங்களும் உண்டு. இதனை “வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும்”(தொல்.216) என்பதாய் விளக்கி நிற்கிறது,தொல்காப்பியம்.

சான்று) பலப்பல, சிலச்சில.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் மிகச் சிறப்ப(ஐங்.42:1), புலம்பப் பிரிய(ஐங்.57:3), அறியப் பசந்தன்று(ஐங்.55:4), பைபயத் தணந்தனை(ஐங்.83:1), சிதையப் பொய்க்குமோ(ஐங்.49:4), நீலச் சேவல்(ஐங்.51:1), போலப் பல(ஐங்.47:5), போலப் பலர்(ஐங்.84:4), நெகிழச் சாஅய்(ஐங்.27:3), நெகிழச் சாஅய்(ஐங்.28:3), அழப் பிரிந்தன(ஐங்.18:3), அழப் பிரிந்தே(ஐங்.38:4), அழப் பிரிந்துதன்(ஐங்.40:2), ஞெகிழப் பிரிந்தன(ஐங்.39:3), கொளக் காவலர்(ஐங்.29:1), நிழற்றக் கரைசேர்(ஐங்.74:2), பாய்ந்தெனக் கலங்கி(ஐங்.53:2), பாய்ந்தெனக் கண்ணறுங்(ஐங்.73:2), அருந்தெனப் பசு(ஐங்.93:1), பழனக் கம்புள்(ஐங்.60:1), பழனப் பன்(ஐங்.70:1), பழனப் பாகன்(ஐங்.99:1), எனக் கருதிய(ஐங்.36:4), எனப் பற்றிய(ஐங்.79:2), வந்தெனப் புனலாடு(ஐங்.72:4) என்பதாய் அகரவீற்று நிறுத்தசொற்களில் வலிமிகல் நிகழ்ந்துள்ளது. வலிமிகலினைப் பெறும் இந்த அகரவீற்று நிறுத்தசொற்கள் அஃறிணைப் பெயர்களாகவும், வினையெச்சச் சொற்களாகவும், உவமச் சொற்களாகவும், எச்சச் சொல்லாகவும் அமைந்து வல்லெழுத்தினை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவிகளுடன் இணைகின்றன. இது தொல்காப்பிய அகரவீற்று வலிமிகல் கோட்பாட்டினை ஒத்ததாக அமைந்துள்ளது. மேலும், தொல்காப்பியத்தால் வலிமிகல் பெறுவனவாகச் சுட்டப்பெறும் அகரச்சுட்டும், ‘ஆங்க’ என்னும் உரையசைக் கிளவியும் ஆய்வுப்பகுதியில் இடம்பெறவில்லை.

அகரவீற்றில் மெலிமிகலும் ஐங்குறுநூறும்

சுட்டாகிய அகரவீற்றின் முன் க், ச், த், ப் இணையுகையில் தத்தம் ஒற்றாகிய வலி(க், ச், த், ப்) மிகுவதைப் போலவே சுட்டாகிய அகரவீற்று நிறுத்த சொல்லுடன் ஞ்,ந்,ம் ஆகியவற்றை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவிகள் இணையுகையில் தத்தம் ஒற்றாகிய மெலி (ஞ், ந், ம்) மிகுகிறது. இது, “சுட்டின் முன்னர் ஞநம தோன்றின் / ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்”(தொல்.206) என்பதின்வழி பெறப்படுகிறது.

சான்று)

இதனை· அகரவீற்றுச்சுட்டு(அ) +(ஞ்)+ஞ் / (ந்)+ந் / (ம்)+ம் என்பதாய் முறைப்படுத்த முடிகிறது.

அடுத்ததாய், வேற்றுமைப் புணர்ச்சியில் அகரவீற்று நிறுத்த சொல்லினை உடைய அஃறிணைப் பெயரானது வல்லெழுத்தினை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவியுடன் இணையுகையில்

வலிமிகுந்து புணர வேண்டுமென்பது “வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே”(தொல்.217) என்பதின்வழி விளக்கப்பட்டிருப்பினும் அந்த அகரவீற்று நிறுத்தசொல்லானது மரப்பெயராக இருப்பின் அங்கு குறித்துவரு கிளவியின் முதலுக்கு இனமான மெல்லெழுத்து பெற்றும் புணரும். “மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே”(தொல்.218) என்ற சூத்திரத்தின்வழி இக்கருத்து அறியப்படுகிறது. மேலும், இது “கசதப முதலிய மொழிமேல் தோன்றும் / மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான் / ஙஞநம வென்னும் ஒற்றா கும்மே / அன்ன மரபின் மொழிவயி னான”(தொல்.144) என்ற தொகைமரபு சூத்திரத்தினை ஒத்த கருத்துடையது.

சான்று)

இதனை・ அகரவீற்று மரப்பெயர் +(ங்)+க் / (ஞ்)+ச் / (ந்)+த் / (ம்)+ப் என்பதாகக் கட்டமைக்க முடிகிறது.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறும் அகரவீற்று நிறுத்தசொற்களில் மெலிமிகல் நிகழவில்லை. அகரவீற்றில் மெலிமிகல் நிகழும் நிறுத்தசொற்களாகத் தொல்காப்பியம் சுட்டியிருக்கும் அகரச் சுட்டும், அகரவீற்று மரப்பெயரும் ஆய்வுப்பகுதியில் இடம்பெறாமை இதற்கு காரணமாகிறது.

அகரவீற்றில் இடைமிகலும் ஐங்குறுநூறும்

சுட்டாகிய அகரவீற்றில் வலிமிகலையும் மெலிமிகலையும் விளக்கிய தொல்காப்பியம் இடைமிகலை விளக்கவும் தவறவில்லை. “யவமுன் வரினே வகரம் ஒற்றும்”(தொல்.207) என்பதாய் யகர வகரம் குறித்துவரு கிளவியின் முதல் மொழியாக அகரச் சுட்டின் முன்னே வரினும், “உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது”(தொல்.208) என்பதாய் உயிரெழுத்து குறித்துவரு கிளவியின் முதல் மொழியாக அகரச் சுட்டின் முன்னே வரினும் இடையினமாகிய வகர ஒற்று(வ்) மிகுதலை விளக்கி நிற்கிறது.

சான்று)

அவ்வாடை, அவ்விலை என்பதாக அமையும் அகரச் சுட்டு + உயிர் என்ற புணர்ச்சியில் வகர மெய்யானது (வ்) ‘குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டல்’(தொல். 161) என்ற விதியின்படி இரட்டித்துப் புணர்கிறது. இது நூற்பாவில் உள்ள ‘ஆயியல்’(நெறியால்) என்ற வார்த்தையின்வழி பெறப்பட்டதென்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் காரணம் கூறுவர். மேலும் இவர்கள் இருவரும் இது நிலைமொழித் தொழில் என்றும் சுட்டுவர்.

அதன்படி, அ + உயிர் என்ற புணர்ச்சியில் முதலில் வகர ஒற்று(வ்) தோன்றி 'அவ்' என்ற நிறுத்த சொல்லினை உருவாக்கிய பின்னரே அது உயிரை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவியுடன் இணைகிறது. இம்முறைமை தொல்காப்பிய நிறுத்தசொல் உருவாக்க முறைமையை வெளிக்காட்டி நிற்கிறது.

இதன்படி・ அ + ய்/வ் ・ அ + வ் + ய்/வ் என்பதாயும், அ + உயிர் ・ அ + வ் + உயிர் ・ அவ் + வ் + உயிர் என்பதாயும் இதன் புணர்முறைமையைக் கட்டமைக்க முடிகிறது.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறும் அகரவீற்று நிறுத்தசொற்களில் இடைமிகல் நிகழவில்லை. அகரவீற்றில் இடைமிகல் நிகழும் நிறுத்தசொல்லாகத் தொல்காப்பியம் சுட்டியிருக்கும் அகரச் சுட்டு ஆய்வுப்பகுதியில் இடம்பெறாமை இதற்கு காரணமாக அமைகிறது.

அகரவீற்றில் சாரியை மிகலும் ஐங்குறுநூறும்

மிகுதல் புணர்ச்சிக்கான வகைகளுள் ஒன்றான சாரியை மிகுதலும் அகரவீற்றில் இடம்பெற்றுள்ளமையைத் தொல்காப்பியம் 219,220,221 என்ற மூன்று நூற்பாக்களின்வழி விளக்கி நிற்கிறது. இவ்வாறு சாரியை மிகும் அகரவீறுகள் அனைத்துமே வல்லெழுத்தினை முதலாக உடைய குறித்துவரு கிளவியுடன் இணைவதையும் அறியமுடிகிறது. இதன்படி, அகரவீற்றில் சாரியை மிகுதலை·
அகரவீறு + சாரியை + க் / ச் / த் / ப் என்பதாகப் பொதுமைப்படுத்தலாம்.
அகர ஈறு + சாரியை + க் / ச் / த் / ப்

"மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை"(தொல்.219) என்பதின்வழி 'மக' என்னும் அகரவீற்றுப் பெயர்ச்சொல்லானது வேற்றுமைப் பொருட்புணர்ச்சியில் குறித்துவரு கிளவி முதல் வல்லெழுத்துடன் புணரும்போது 'இன்' சாரியை மிக்குப் புணரும் என்பது விளக்கப்பட்டுள்ளது.
சான்று)

இவ்வாறு, அகரவீறு+சாரியை+ க்/ச்/த்/ப் என்பதாகப் பொதுமைப்படுத்தப்பட்ட அகரவீற்றில் சாரியை மிகுதல் கோட்பாட்டினை· மக + இன் + க் / ச் / த் / ப் என்பதாகச் சுருக்கி 'மக' என்னும் அகரவீற்றிற்குரியதாகக் கொள்ள முடிகிறது.

'மக' என்னும் அகரவீற்றுப் பெயர் இன் சாரியைப் பெற்றுப் புணர்வதை விளக்கிய தொல்காப்பியம், அது சில இடங்களில் அத்துச்சாரியை பெற்றுப் புணர்வதையும் விளக்கத் தவறவில்லை. "அத்தவண் வரினும் வரைநிலை இன்றே"(தொல்.220) என்ற சூத்திரத்தின்வழி இது பெறப்படுகிறது.
சான்று)

இங்கு தோன்றும் வல்லெழுத்தானது சாரியையால் தோன்றியதாகும். இது "நச்சினார்க்கினியர் இச்சூத்திரம் ஈற்று வல்லெழுத்தும் அத்தும் வகுப்பதாகக் கூறுவர். அத்து மட்டுமே வகுப்பது இச்சூத்திரம். மகத்துக்கை என்பதில் உள்ள ககர ஒற்று சாரியையால் வந்த வல்லெழுத்தாகும். வரினும் என்பதின் உம்மை இன்சாரியையினையும்,சாரியையாற்பெறும் வல்லெழுத்தினையும் தழுவியது"(ப.63,2015-16) என்ற சிவலிங்கனாரின் கருத்தின்வழி அறியப்படுகிறது.

இதனால் மக + இன் + க் / ச் / த் / ப் என்பதாகக் கொள்ளப்பட்ட மகப்பெயர் சாரியை பெறும் கோட்பாட்டினை · மக + இன் / அத்து + க் / ச் / த் / ப் என்பதாக முறைப்படுத்த வேண்டலாகிறது.
இறுதியாய், 'பல' என்னும் அகரவீற்றுப் பன்மைச் சொல்லானது குறித்துவரு கிளவி முதல் வல்லெழுத்துடன் புணரும்போது 'வற்று' சாரியை பெற்றுப் புணர்கிறது. இது "பலவற் றிறுதி உருபியல் நிலையும்"(தொல்.221) என்பதின்வழி விளக்கப்பட்டுள்ளது.

சான்று)

பல + கோடு · பல + வற்று + கோடு · பலவற்றுக்கோடு.

இதன் புணர்முறைமை இரண்டாம் இயலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, அகரவீறு+சாரியை+க்/ச்/த்/ப் என்பதாகப் பொதுமைப்படுத்தப்பட்ட அகரவீற்றில் சாரியை மிகுதல் கோட்பாட்டினை· பல + வற்று + க் / ச் / த் / ப் என்பதாக முறைபடுத்த முடிகிறது.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறும் அகரவீற்று நிறுத்தசொற்களில் சாரியை மிகல் நிகழவில்லை. அகரவீற்றில் சாரியை மிகல் நிகழும் நிறுத்தசொல்லாகத் தொல்காப்பியம் சுட்டியிருக்கும் 'மக' என்பது ஆய்வுப்பகுதியில் இடம்பெறாமையும், 'பல' என்பது இயல்பாகவும் புணர்ந்துள்ளமை இதற்கு காரணமாக அமைகிறது. 'பல' என்னும் அகரவீற்று நிறுத்தசொல் "பலவற் றிறுதி .. இயல்பென மொழிப"(தொல்.211) என்பதாய் இயல்பாகவும் புணரும் என்பது விளக்கப்பட்டிருப்பதால் 'பல' என்பது சாரியை பெறாமையைத் தொல்காப்பியத்தின் புணர்ச்சிக் கோட்பாட்டிற்கு மாறுபட்ட முடிவாகக் கொள்ளமுடியாது.

அகரவீற்றில் குன்றலும் ஐங்குறுநூறும்

அகரவீற்றில் குன்றலானது இரு இடங்களில் இடம்பெறுவதைத் தொல்காப்பியம் சுட்டியுள்ளது. முதலில் "சாவ என்னும் செயவென் னெச்சத்து / இறுதி வகரம் கெடுதலும் உரித்தே"(தொல்.210) என்பதின்வழி 'சாவ' என்ற செயவென் வினையெச்சத்து அகரவீற்று நிறுத்தசொல்லுடன் க், ச், த், ப் இணையுகையில், சாவ என்பதில் உள்ள இறுதி அகரமும் அதனால் பற்றப்பட்ட வகர மெய்யும் (வ்) கெடும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

சான்று)

இதனை· சா(வ்+அ) + க்/ச்/த்/ப் என்பதாய் முறைப்படுத்த முடிகிறது.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறும் சாப் பிறக்கும்(ஐங்.24:1) என்ற புணர்மொழியினை 'சாவ + பிறக்கும்' என்பதாகக் கொள்ளமுடிகிறது. இந்நிலையில் 'சாவ' என்ற செயவென் வினையெச்சத்து அகரவீற்று நிறுத்தசொல்லுடன் வல்லெழுத்தான பகர ஒற்றினை(ப்) முதலாகக் கொண்ட 'பிறக்கும்' என்ற குறித்துவரு கிளவி இணையுகையில், சாவ என்பதன் இறுதி அகரமும் அதன் வகர மெய்யும் (வ்) கெட்டு 'சாப் பிறக்கும்' என்பதாகப் புணர்ந்துள்ளது. இது தொல்காப்பிய அகரவீற்றுக் குன்றல் கோட்பாட்டினை ஒத்ததாக அமைந்துள்ளது.

'சாவ' என்ற சொல்லின் அகரம் அதன் வகர மெய்யுடன் கெடுவதைப் போலவே நீண்டகாலம் வாழ்க என்னும் பொருளில் வரும் 'வாழிய' என்ற அகரவீற்றுப் புணர்ச்சியிலும் அகரவீறு அதன் 'ய'கர மெய்யுடன்(ய்) கெட்டுப் புணர்ந்துள்ளது. இது "வாழிய வென்னுஞ் சேயென் கிளவி / இறுதி யகரங் கெடுதலும் உரித்தே"(தொல்.212)வழி பெறப்படுகிறது.

சான்று)

இதனை∙ வாழி(ய்+அ) + க்/ச்/த்/ப் என்பதாய் முறைப்படுத்த முடிகிறது.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறும் வாழி தோழி (ஐங்.31:1, 32:1, 33:1, 34:1, 35:1, 36:1, 37:1, 38:1, 39:1, 40:1) என்ற புணர்மொழியினை 'வாழிய + தோழி' என்பதாகக் கொள்ளமுடிகிறது. இந்நிலையில் நீண்டகாலம் வாழ்க என்னும் பொருளில் வரும் 'வாழிய' என்ற அகரவீற்று நிறுத்தசொல்லுடன் வல்லெழுத்தான தகர ஒற்றினை(த்) முதலாகக் கொண்ட 'தோழி' என்ற குறித்துவரு கிளவி இணையுகையில், வாழிய என்பதன் இறுதி அகரம் அதன் யகர மெய்யும்(ய்) கெட்டு 'வாழி தோழி' என்பதாகப் புணர்ந்துள்ளது. இது தொல்காப்பிய அகரவீற்றுக் குன்றல் கோட்பாட்டினை ஒத்ததாக அமைந்துள்ளது.

மேலும், ஆய்வுப்பகுதியில் இடம்பெறும் வாழி யாதன் (ஐங்.1:1, 2:1, 3:1, 4:1, 5:1, 6:1, 7:1, 8:1, 9:1, 10:1), வாழி யவினி (ஐங்.1:1, 2:1, 3:1, 4:1, 5:1, 6:1, 7:1, 8:1, 9:1, 10:1), வாழியோ(ஐங்.59:1, 77:1) என்ற புணர்மொழிக்கான நிறுத்தசொல் 'வாழிய' என்பதாகக் கருதி, இதனையும் 'வாழிய + ஆதன்', 'வாழிய + அவினி', 'வாழிய + ஓ' என்ற புணர்மொழிகளாகக் கொள்ள முடியுமா என்ற ஐயம் ஏற்படுகிறது. ஆனால் இதற்கு 'வாழி(ய்+அ) + க்/ச்/த்/ப்' என்ற கோட்பாட்டாக்கம் எதிரானதாக அமைந்துள்ளது. இந்நிலையில் " 'ஒன்றென முடித்தல்'(பொருள் உரை.665) என்பதனால், பிற கணத்துக்கண்ணும் இவ்விதி கொள்க. எ-டு : வாழிஞெள்ளா என வரும்"(ப.246,1979) என்ற இளம்பூரணரின் உரைக்கருத்து இதற்கு விடையளிக்கிறது. இதன் அடிப்படையில் வன் கணத்துக்கு மட்டுமின்றி பிற கணத்துக்கும் இவ்விதி ஏற்புடையது என்பது பெறப்பட்டு ∙ வாழி(ய்+அ) + நாற்கணம் என்பதாகக் கட்டமைக்க முடிகிறது. இதன்வழி, வாழி யாதன், வாழி யவினி, வாழியோ என்ற புணர்மொழிகளை முறையே 'வாழிய + ஆதன்', 'வாழிய + அவினி', 'வாழிய + ஓ' என்பதாகக் கொண்டு, வாழிய என்பதன் இறுதி அகரம் உயிர் கணத்தினை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவியுடன் இணையுகையில் அதன் யகர மெய்யுடன்(ய்) கெட்டு, உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்துள்ளதாகக் கொள்ளமுடிகிறது.

அகரவீற்றில் இயல்பும் ஐங்குறுநூறும்

அகரவீற்று நிறுத்தசொற்கள் இயல்பாகப் புணர்வதைத் தொகைமரபிலும், உயிர் மயங்கியலிலும் விளக்கியுள்ளது,தொல்காப்பியம். "ஞநமய வவெனும் முதலாகு மொழியும் / உயிர்முத லாகிய மொழியும் உளப்பட / அன்றி யனைத்தும் எல்லா வழியும் / நின்ற சொன்முன் இயல்பா கும்மே"(தொல்.145)என்பதன்வழி இருபத்திநான்கு ஈற்றெழுத்துகளின் முன்னரும் உயிர் எழுத்தும், ஞ், ந், ம், ய், வ் ஆகிய மெய்யெழுத்துகளும் முதலாய் அமைந்த குறித்துவரு கிளவிகளுடன் இணையுகையில் அது இயல்பாகப் புணரும் என்பது விளக்கப்பட்டுள்ளது. இதன்வழி அல்வழியிலும், வேற்றுமையிலும் அகரவீற்று நிறுத்தசொற்கள் குறித்துவரு கிளவியின் முதலில் உயிரெழுத்துகளையோ, ஞ், ந், ம், ய், வ் என்ற மெய்யெழுத்துகளையோ உடைய சொற்களுடன் இணையும்போது இயல்பாகப் புணரும் என்பது பெறப்படுகிறது.

சான்று)

• இதனை அகரவீற்றுப் பெயர் + உயிர்/ ஞ்/ ந்/ ம்/ ய்/ வ் (இயல்பாகும்) என்பதாய் முறைப்படுத்த முடிகிறது.

அல்வழிப் புணர்ச்சியில் அகரவீறுகள் க்,ச்,த்,ப் என்ற வல்லெழுத்தினை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவியுடன் இணையும் சில இடங்களில் இயல்பாகப் புணரும் தன்மையானது என்று உயிர் மயங்கியலில் விளக்கப்பட்டுள்ளது. இது, "அன்ன என்னும் உவமக் கிளவியும் / அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும் / செய்ம்மன என்னும் தொழிலிறு சொல்லும் / ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும் / செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும் / செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும் / அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும் / பலவற் றிறுதிப் பெயர்க்கொடை யுளப்பட / அன்றி யனைத்தும் இயல்பென மொழிப"(தொல்.211) என்ற சூத்திரத்தின்வழி பெறப்படுகிறது.

இதன்வழி, அன்ன என்னும் உவம உருபாகிய அகரவீற்று இடைச்சொல்லும், அகரவீற்று உயர்திணைப் பெயர்ச்சொல்லும், செய்ம்மன எனும் வாய்பாட்டு வினைச்சொல்லும், ஏவலை நோக்கமாகக் கொண்ட வியங்கோள் வினைமுற்றுச்சொல்லும், செய்த எனும் வாய்பாட்டுப் பெயரெச்சச்சொல்லும், செய்யிய எனும் வாய்பாட்டு வினையெச்சமும், உரையசைச் சொல்லாகிய 'அம்ம' எனும் இடைச்சொல்லும், பலவற்றை உணர்த்தும் அகரவீற்றுப் பெயர்ச்சொல்லும் க், ச், த், ப் என்பதனை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவியுடன் இணையுகையில் இயல்பாகப் புணரும் என்று விதித்துள்ளது தொல்காப்பியம்.

சான்று)

• இவற்றை அன்ன/ ஊர/ அகரவீற்று உயர்திணை விளிச்சொல்/ அகரவீற்று வியங்கோள் வினைமுற்று/ செய்த எனும் வாய்பாட்டு அகரவீற்றுப் பெயரெச்சச்சொல்/ செய்யிய எனும் வாய்பாட்டு அகரவீற்றுப் வினையெச்சச்சொல்/ 'அம்ம' எனும் அகரவீற்று இடைச்சொல்/ பலவற்றை உணர்த்தும் அகரவீற்றுப் பெயர்ச்சொல் + க்/ச்/த்/ப் (இயல்பாகும்) என்பதாய் முறைப்படுத்த முடிகிறது.

ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறும் அகரவீற்று நிறுத்தசொற்கள் தண்ணக மண்(ஐங்.27:2, 30:2), நுடங்க வாலிழை(ஐங்.73:1), விளைக வயலே(ஐங்.2:2), ஓதுக என(ஐங்.4:2), நீங்குக என(ஐங்.5:2), நந்துக என(ஐங்.6:2), கெடுக என(ஐங்.7:2), தோற்க தில்(ஐங்.12:4), வாய்க்க வளநனி(ஐங்.10:2), ஆற்றுக தில்(ஐங்.12:3), சிறக்க என(ஐங்.1:2), அருந்த நாரை(ஐங்.70:1), சிவந்த சேயரி(ஐங்.52:2), செய்த வினைய(ஐங்.93:3), நயந்த நன்னுதல்(46:2), மிடைந்த கோட்ட(ஐங்.97:1), காய்த்த நெல்லிற்(ஐங்.4:4), வந்த பஞ்சாய்(ஐங்.54:4), வந்த தண்புனல்(ஐங்.69:2), வந்த சிறையழி (ஐங்.69:2), தோய்ந்த மார்பே(ஐங்.63:4), சொரிந்த அகன்பெரு (ஐங்.47:1), சொரிந்த வட்டி(ஐங்.48:2), புறந்தந்த புனிற்று(ஐங்.25:1), அவிழ்ந்த வண்டு(ஐங்.40:4), மலர்ந்த பொய்கை(ஐங்.4:4), மலர்ந்த மார்பிவள் (ஐங்.51:4), அமர்ந்த கண்ணள்(ஐங்.79:1), பூத்த கரும்பின்(ஐங்.4:4), பூத்த மா(ஐங்.10:4), பூத்த புழைக்கால்(ஐங்.10:4), முகைந்த தாமரை(ஐங்.6:4), மகிழ்நநின்(ஐங்.52:4, 57:4, 62:4, 69:1, 77:1, 80:4), மகிழ்நதானே(ஐங்.66:2), சிறப்ப மயங்கினள்(ஐங்.42:1), தேம்ப எவன்(ஐங்.56:3), தெளிர்ப்ப

முயங்கியவர்(ஐங்.24:4), என்ப விரிமலர் (ஐங்.67:3), என்ப புனலே (ஐங்.71:3), என்ப பாண(ஐங்.82:1), என்ப பழனத்து(ஐங்.89:2), பெருமநின் (ஐங்.48:4), பெருமபிறர்(ஐங்.63:4), பெருமநிற்(ஐங்.85:5), அம்ம வாழி(ஐங்.31:1, 32:1, 33:1, 34:1, 35:1, 36:1, 37:1, 38:1, 39:1, 40:1, 77:1, 89:1), அம்மநீ(ஐங்.67:1), பைய நிழற்ற(ஐங்.74:2), நிறைய நெல்லின்(30:2), நிறைய மனையோள்(ஐங்.47:2), வேண்டிய குறிப்பினை(ஐங்.46:3), தெய்யநின்(ஐங்.65:4), ஓங்கிய விரிபூ(ஐங்.33:2), ஓங்கிய யாண(ஐங்.50:2), நீடிய முது(ஐங்.21:1), எய்திய புனலணி(ஐங்.23:2), தேற்றிய மொழியே(ஐங்.56:4), ஆகிய யானினி(ஐங்.59:3), ஆகிய பணைத்தோ(ஐங்.99:4), இனைய எவ்வாய்(ஐங்.52:3), இனைய செய்தி(ஐங்.85:4), வித்திய வெண்முளை(ஐங்.29:2), சினைய சிறுமீன்(ஐங்.1:4), வினைய மன்ற(ஐங்.93:3), அடைய முயங்கி(ஐங்.39:2), ஆடிய புள்ளி(ஐங்.22:1), ஆடிய வள்ளல்(ஐங்.22:1), நனைய காஞ்சி(ஐங்.1:4), பிரிய அனை(ஐங்.57:3), ஐய நின்(ஐங்.44:3), இந்திர விழவு(ஐங்.62:1), ஊரநின்(ஐங்.42:2, 43:3, 49:3, 60:2, 86:2, 87:3), ஊர மாணிழை(ஐங்.47:3), ஊர வேண்டேம்(ஐங்.48:3), ஊர தஞ்ச(ஐங்.50:2), ஊர புளிங்காய்(ஐங்.51:2), ஊர நீ(ஐங்.53:4), ஊர எந்நலந்(ஐங்.63:2), ஊர புதல்வனை(ஐங்.65:2), ஊர பேணா(ஐங்.68:2), ஊர தூயர்(ஐங்.70:3), ஊர நீ(ஐங்.81:3,85:3), ஊர எம்மிவ(ஐங்.86:2), ஊர ஒண்டொடி(ஐங்.98:2), தர வந்த(ஐங்.54:4), அயர விரும்புதி(ஐங்.61:5), தீர நினக்கு(ஐங்.59:2), அந்தர மகளிர்(ஐங்.76:4), மலர தொன்னிலை(ஐங்75:2), தில்ல யாமே(ஐங்.12:3), நீல விரும்போத்து(ஐங்.91:1), போல மலரு(ஐங்.68:2), கால வஞ்சிறை(ஐங்.20:1), அயல வடு(ஐங்.14:1), நல்ல சொல்லி(ஐங்.22:3), பல பொலிக(ஐங்.1:2), பல சிறக்க(ஐங்.3:2), பல நந்துக(ஐங்.6:2), பல துஞ்சும்(ஐங்.43:2), பல சூள்(ஐங்.43:4), பலபொய்த்(ஐங்.47:5), தவநனி(ஐங்.80:4), எழ நீரலை(ஐங்.77:2), வேழ மூதூ(ஐங்.15:3), வேழ வெண்பூ(ஐங்.17:1,19:3), வளமனை(ஐங்.66:4), வளமலர்(ஐங்.88:1), உற மரீஇ(ஐங்.29:3), உற மைய(ஐங்.59:1), உற்ற சூளே(ஐங்.31:4,53:4), உற்ற சூள்(ஐங்.37:4), உற்ற நோயே(ஐங்.53:1), மன்ற பல்பொழில்(ஐங்.93:3), துடுமென விழூஉம்(ஐங்.61:2), அன்ன அடைகரை(ஐங்.13:1), அன்ன செருந்தியொடு(ஐங்.18:1), அன்ன தூம்புடை(ஐங்.20:3), அன்ன நெடுங்கட்(ஐங்.30:1), அன்னநின்(ஐங்.42:3), அன்ன யாமை(ஐங்.43:1), அன்ன பார்ப்பு(ஐங்.43:2), அன்ன இவணலம்(ஐங்.57:2,58:2), அன்ன வெண்ணெற்(ஐங்.58:1), அன்ன நல்லோர்(ஐங்.61:3), அன்ன புன்றலைப்(ஐங்.62:1), அன்ன தடங்கோட்(ஐங்.94:1), அன்ன துணையொடு(ஐங்.94:2), உய்த்தென உண்கண்(ஐங்.69:3), சிவந்தன மகிழ்(ஐங்.80:4), எனவேட் டோளே(ஐங்.1:3, 2:3, 3:3, 4:3, 5:3, 6:3, 7:3, 8:3, 9:3, 10:3), எனவேட் டேமே(ஐங்.1:6, 2:6, 3:6, 4:6, 5:6, 6:6, 7:6, 8:6, 9:6, 10:6), என விரும்பின்(ஐங்.89:4) என்பதாய் இயல்பாகவும்,

வாய்ப்பதாக வென(ஐங்.8:6), கொடுக்க வென(ஐங்.6:6), வருக விரவலர்(ஐங்.2:2), அடக்கவும்(ஐங்.68:4), வாழ்க வென(ஐங்.1:6), நிற்க வென(ஐங்.5:6), ஆகற்க வென(ஐங்.4:6, 9:6), பொலிக வென(ஐங்.3:6), சிறக்க வென(ஐங்.2:6), செல்க வென(ஐங்.7:6,10:6), பசந்தவென்(ஐங்.34:4), கலித்த வாம்பல்(ஐங்.65:1), மகிழ்நவென்(ஐங்.45:4), மகிழ்ந வாற்றுற(ஐங்.59:1), மகிழ்ந வதனால்(ஐங்.75:1), சிவப்ப வழுது((ஐங்.42:1), தெளிப்பவும்(ஐங்.21:3), அழுப வென்ப(ஐங்.32:3),

என்பவவன்(ஐங்.32:3), அம்ம வம்(ஐங்.54:6), வெறுக்கைய வாகி(ஐங்.93:4), பற்றிய மகிழ்ந(ஐங்.79:2), தெய்யவெம்(ஐங்.64:4), கருதிய வுண்(ஐங்.36:4), வித்திய வுழவர்(ஐங்.3:4), விரும்பிய வொண்டழைப்(ஐங்.15:1), பாய்தர வவிழ்ந்த(ஐங்.40:4), தில்லவென்(ஐங்.12:4), பல வூறுக(ஐங்.3:2), கொளவே(ஐங்.33:4), பெற்ற விவளுமா(ஐங்.50:4), ஈன்ற வெம்(ஐங்.65:3), அன்னவென்(ஐங்.18:3), அன்னவிவ(ஐங்.54:3), அன்னவிவள்(ஐங்.55:2, 56:2), போர்த்தனவே(ஐங்.16:4), அணிந்தனவான்(ஐங்.45:4), பழன வூர(ஐங்.53:4), பழன வெதிரின்(ஐங்.91:4), பழன வூரன்(ஐங்.96:4), எனவே(ஐங்.82:4), இருந்தன வெனவே(ஐங்.82:4) என்பதாய் உடம்படுமெய் பெற்றும் புணர்ந்துள்ளன. இவ்வாறு இயல்பாகவும் உடம்படுமெய் பெற்றும் புணர்ந்துள்ள இந்த அகரவீற்று நிறுத்தசொற்களுடன் இணையும் பல குறித்துவரு கிளவிகளின் முதலானது உயிரெழுத்துகளையோ, ந், ம், ய், வ் என்ற மெய்யெழுத்துகளையோ கொண்டதாக அமைந்துள்ளன. மேலும் சில இடங்களில் குறித்துவரு கிளவி வல்லெழுத்தினை முதலாகக் கொண்டதாக அமைந்திருக்கையில் அங்குள்ள நிறுத்தசொற்கள் அன்ன என்னும் உவம உருபாகிய இடைச்சொல்லாகவும், உயர்திணைப் பெயர்ச்சொல்லாகவும், வியங்கோள் வினைமுற்றுச்சொல்லாகவும், செய்த எனும் வாய்பாட்டுப் பெயரெச்சச்சொல்லாகவும், உரையசைச் சொல்லாகிய ‘அம்ம’ எனும் இடைச்சொல்லாகவும், பலவற்றை உணர்த்தும் பெயர்ச்சொல்லாகவும் அமைந்துள்ளன. இத்தகைய காரணிகளால் இயல்பாகப் புணரும் ஐங்குறுநூற்று அகரவீற்றுச் சொற்கள் தொல்காப்பிய அகரவீற்று இயல்பு புணர்ச்சிக் கோட்பாட்டிற்குப் பொருத்தமுடையதாக அமைந்துள்ளன. மேலும், தொல்காப்பியத்தால் வல்லெழுத்தினை முதலாகக் கொண்ட குறித்துவரு கிளவியுடன் இயல்பாகப் புணர்வனவாகச் சுட்டப்பெறும் செய்ம்மன எனும் வாய்பாட்டு வினைச்சொல்லும், செய்யிய எனும் வாய்பாட்டு வினையெச்சமும் ஆய்வுப்பகுதியில் இடம்பெறவில்லை.

முடிவுரை

தொல்காப்பியத்தின் அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாடானது மொழிபுணர் இயல்புகளின் அடிப்படையில் மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல், இயல்பு என்பதாகக் கட்டமைக்கப்பட்டு, ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றுத் தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது. அகரவீற்று மெய்பிறிதாதல் புணர்ச்சிக் கோட்பாடான பல+பல=பற்பல, சில+சில=சிற்சில என்பதில் உரையாசிரியர்களிடம் உள்ள முரண்பட்ட கருத்துகள் விவாதிக்கப்பட்டு, உயிர்மெய் பிறிதாதல் இல்லை என்பது நிறுவப்பட்டுள்ளது. ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்று அகரவீற்று நிறுத்த சொற்களில் மெய்பிறிதாதல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் இடம் பெறவில்லை. அகரவீற்று மிகுதல் புணர்ச்சிக் கோட்பாடானது எழுத்து மிகல், சாரியை மிகல் என்ற மிகுதல் புணர்ச்சியின் இரு வகைகளால் பகுத்து விளக்கப்பட்டுள்ளது. இவற்றுள் எழுத்து மிகலானது வலிமிகல், மெலிமிகல், இடைமிகல் என்பதாக வகைப்படுத்தி விளக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பகுதியான ஐங்குறுநூற்றில் வலிமிகுந்ததற்கான சான்றுகள் இடம்பெற்றிருப்பினும், மெலி மற்றும் இடை மிகுந்ததற்கான சான்றுகள் இடம் பெறவில்லை. மேலும் சாரியை மிகுதலில் இன் மற்றும் வற்றுச் சாரியைகள் மிகுவது தொல்காப்பியத்தின்வழி அறியப்பட்டு

இருப்பினும் ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்று அகரவீற்று நிறுத்த சொற்கள் சாரியை பெற்றுப் புணர்ந்ததற்கான சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை. அடுத்ததாய், அகரவீற்று குன்றல் புணர்ச்சிக் கோட்பாடானது சா/வாழி+க்/ச்/த்/ப் என்பதாக முறைப்படுத்தப்பட்டு, அதனுடன் பொருந்தும் ஐங்குறுநூற்றுப் புணர்மொழிகள் ஒப்பிடப்பட்டுள்ளன. இறுதியாய் அகரவீற்று இயல்பு புணர்ச்சிக் கோட்பாடு வரையறை செய்யப்பட்டு, அதனுடன் பொருந்தியமையும் ஐங்குறுநூற்று அகரவீற்றுப் புணர்ச்சிகள் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன.

இவ்வாறு, தொல்காப்பிய அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாடானது ஐங்குறுநூற்று அகரவீற்று நிறுத்தசொல் புணர்ச்சிகளுடன் பல இடங்களில் பொருந்தி அமைகின்றன. சில இடங்களில் தொல்காப்பியம் சுட்டியிருக்கும் அகரவீற்றுப் புணர் முறைமைக்கான சான்றுகள் ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறாமலிருப்பினும் இதனை தொல்காப்பிய அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாட்டிற்கு மாறுபட்ட முடிவாகக் கொள்ள முடியாது. மாறாக, தொல்காப்பியம் கூறியிருக்கும் அனைத்து அகரவீற்றுப் புணர்ச்சியும் ஆய்வுப்பகுதியான ஐங்குறுநூற்றில் இடம்பெறவில்லை என்றே கொள்ள முடிகிறது. இத்தகைய முடிவானது 'தொல்காப்பிய அகரவீற்றுப் புணர்ச்சிக் கோட்பாடு ஐங்குறுநூற்று அகரவீற்று நிறுத்த சொற்களின் புணர்முறைமையுடன் பொருந்தியமையும்' என்ற ஆய்வுக் கருதுகோளை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. இதனை, மேலும் வலுப்படுத்த தொல்காப்பியத்தின் மற்ற ஈறுகளான உயிர், மெய் மற்றும் குற்றியலுகரம் ஆகியனவற்றின் புணர்ச்சியும் முன்பழந்தமிழ் நூலான ஐங்குறுநூற்றுப் புணர் முடிவுகளுடன் பொருத்தி ஆராயப்பட வேண்டும். இது உயராய்விற்குரியது.

துணைநூற்பட்டியல்

சிவலிங்கனார்.ஆ.சி(தொ.ஆ.), தொல்காப்பியம் உரைவளம் – உயிர் மயங்கியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2015-16.

சுந்தரமூர்த்தி.கு(ப.ஆ), தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-இளம்பூரணர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1979.

சுப்பிரமணிய சாஸ்திரியார்.பி.சா, தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், முருகவிலாஸ் ஜனகூல பிரஸ், திருச்சி, 1937.

நச்சினார்க்கினியர்(உ.ஆ.), தொல்காப்பியம்-எழுத்ததிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2019(ஆறாம் பதிப்பு).

பாலசுந்தரம்.ச(உ.ஆ.), தொல்காப்பியம்(தொகுதி-1), எழுத்ததிகாரம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2012.

References:

- Sivalinganaar, A.C. (Ed.), *Tolkappiyam Uraivalam – Uyir Mayangiyal*, International Institute of Tamil Studies, Chennai, 2015-16.
- Sundaramoorthy, K. (Ed.), *Tolkappiyam Ezhuthathikaram – Ilampooranar Urai*, Annamalai University, 1979.
- Subramania Sastriyar, P.S., *Tolkappiyam – Ezhuthathikaram*, Murugavilas Janakula Press, Trichy, 1937.
- Naccinarkkiniyar (Comm.), *Tolkappiyam – Ezhuthathikaram*, Sarada Publications, Chennai, 2019 (6th Edition).
- Balasundaram, S. (Comm.), *Tolkappiyam (Volume-1), Ezhuthathikaram*, Periyar University, Salem, 2012.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License. Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.